ஏற்படுகின்றன. இதற்காக அதிகப்படியான பணத்தை ஒதுக்கி, கோடிக் கணக்கான பணத்தை ஒதுக்கி அதிகப்படியான படுக்கைகள் ஏற்படும் காலத்தில் இதிலே இருக்கும் படுக்கை நெருக்கடிகளின் தன்மைகள் நீங்க வழியேற்படும்.

திரு. எம். பூபதி : தலைவரவர்களே, மாண்புமிகு சுகாதார, அரிசன அமைச்சரவர்கள் மருத்துவ மனையில் திடீரென்று சோதனையிட்டார்களே, அதற்கான காரணம் என்ன ? சோதனையிட்டுப் பார்க்கும் நேரத்தில் என்னென்ன புதிய விவரங்கள் கிடைக்கப்பெற்றன ? அதன் மீது என்னென்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, அங்கிருக்கும் பணிகள் எப்படி நடைபெறுகின்றன என்று காண்பதற்காக, குறிப்பாக சமையல்கூடம், செவிலியர் விடுதி ஆகியவைகளைப் பார்வையிட்டார்கள். குறிப்பிடத்தக்க பெரிய குறைபாடு எதுவுமில்லை என்று அவர்களுடைய குறிப்பில் கூறியிருக்கிறார்கள்.

திரு. பி. துரைராஜ் : தலைவர் அவர்களே, திடீர் சோதனையின்போது குறிப்பிடத்தக்க பெரிய தவறுகள் எதுவும் இல்லை என்று சொன்னார்கள். ஏதாவது சிறிய அளவில் குறைகள் கண்டுபிடிக்கப்பட்டனவா ? அதைத் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுப்பதற்கு அரசாங்கம் ஆலோசிக்குமா ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : அங்கே குறிப்பிட்ட நேரம் என்று இல்லாமல் எப்பொழுதுமே, எந்த நேரத்திலுமே பார்வையாளர்கள் என்று சொல்லிக்கொண்டு, மாணவர்கள் என்று சொல்லிக் கொண்டு பல்வேறு இடங்களில் அலைந்துகொண்டிருந்தார்கள். அதைத் தடுக்க வழிவகைகள் காணவேண்டும் என்று குறிப்பு எழுதி வைத்திருக்கிறேன். உணவுப் பண்டங்கள் இவ்வளவு அளவு என்று கையெழுத்துப் போட்டு குறிப்பு எழுதி வைத்த அளவைவிட அதிகமாக முட்டை, ரொட்டி முதலிய உணவுப் பொருள்கள் இருந்தன. அதற்குக் காரணம் என்ன என்று கேட்டு சம்பந்தப்பட்டவர்களிடமிருந்து விளக்கம் பெற வேண்டுமென்றும் கேட்டிருக்கிறேன். இப்படிப்பட்ட பல குறைகள் கண்டு, அவற்றைப் போக்க ஆவன செய்யவேண்டும் என்று சொல்லியிருக்கிறேன்.

உளுந்தூர்பேட்டை அரசு மருத்துவமனை.

* 573 வினா—**திரு. மு. கந்தசாமி படையாச்சி :** மாண்புமிகு கல்வி, சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1961-ம் ஆண்டில், அரசால் மேற்கொள்ளப்பட்ட உளுந்தூர் பேட்டை ஆஸ்பத்திரியை விஸ்தரிக்கும் திட்டம் ஏதேனும் பரிசீலனையில் உள்ளதா ?

(இ) ஆம் என்றால், எப்பொழுது அமுல் செய்யப்படும் ?

(உ) எத்தனை படுக்கைகள் கொண்டதாக அமைக்கப்படவிருக்கிறது ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : (அ), (இ) & (உ) : ஆம். 24 படுக்கைகள் கொண்ட மருத்துவமனை ஒன்று கட்டும் திட்டம் 1971–72 நிதியாண்டில் பரிசீலனைக்காக ஒத்திபோடப்பட்டுள்ளது.

திரு. மு. கந்தசாமி படையாச்சி : 1961-ம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டு இதுவரையில் அந்த ஆஸ்பத்திரி விஸ்தரிப்புத் திட்டம் செயல்படுத்தப் படாததற்குக் காரணம் என்ன ? எவ்வளவு தொகைக்கு எஸ்டிமேட் தயார் செய்யப்பட்டது ? உளுந்தூர்பேட்டை ஜங்ஷன் ரோடில் அடிக்கடி ஆக்ஸிடெண்டு ஏற்பட்டு, சிகிச்சைக்கு வேண்டிய வசதி இல்லாத நிலை இருக்கிறது. ஆகவே, இதுவரையில் ஏன் இந்த விஸ்தரிப்புத் திட்டத்தை மேற்கொள்ளவில்லை என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : இந்த மருத்துவமனைப் பணி இதுவரையில் மேற்கொள்ளப்படாததற்குக் காரணம் நிதிப் பற்றுக் குறைதான். வேறு எந்தக் காரணமும் இல்லை. தொடர்ந்து ஒத்தி வைக்கப்பட்டு, இந்த ஆண்டு பார்ட்டு இரண்டு ஸ்கீமில் கொண்டுவந்து, நிதிப் பற்றுக்குறையால் அடுத்த ஆண்டிற்கு ஒத்திவைக்கப்பட்டிருக்கிறது. ரூ. 5,54,000-க்கு வரைவுத் திட்டம் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. இதன் மூலம் வெளி நோய்ப் பிரிவு (அவுட் பேஷண்ட் டிபார்ட்மெண்டு), 24 படுக்கைகள், மகப்பேறு அறுவை சிகிச்சைக்கூடம் ஒன்று, சமையலறைக் கூடம் ஒன்று, மகப்பேறு கூடம் ஒன்று, மேல்நிலை நீர்த்தொட்டி ஒன்று, கழிவுநீர் சாக்கடை, குடிநீர் வசதி போன்ற வசதிகளுக்காக ரூ. 5,54,000-ல் திட்டம் இடப்பட்டிருக்கிறது. அதற்காக 0·95 எக்கர் புறம்போக்கு நிலம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இந்தத் திட்டம் அடுத்த ஆண்டு பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும். நிதிப் பற்றுக்குறையினால் இந்த ஆண்டு மேற்கொள்ளப்படவில்லை, ஒத்திவைக்கப்பட்டிருக்கிறது.

திரு. மு. கந்தசாமி படையாச்சி : சுமார் ரூ. 5 லட்சத்திற்கு எஸ்டிமேட் சாங்ஷன் ஆகியும் பணம் இல்லாத காரணத்தினால் 6 வருஷங்கள் ஆகியும் ஒத்திவைக்கப்பட்டிருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் கூறினார்கள். இருந்தபோதிலும் அங்கு அதிகமாக ஆக்ஸிடெண்டுகள் ஏற்படுவதன் காரணத்தினால், குறைந்தது ஒரு நாளைக்கு இரண்டு, மூன்று ஆக்ஸிடெண்டுகள் ஏற்படுகிற காரணத்தினால், அதற்கு வேண்டிய நடவடிக்கை எடுத்து, உடனே புதிய கட்டடம் கட்டி, பெட்களை அதிகப்படுத்தி வசதி செய்து கொடுக்க அரசாங்கம் முன்வருமா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, இந்த ஆண்டு இந்தத் திட்டத்தைச் சேர்த்துக்கொள்வதற்கு வாய்ப்பு வசதி இல்லை. அடுத்த ஆண்டில் இந்தத் திட்டம் மேற்கொள்ளப்படும்.

அரசு கலைக் கல்லூரி மாணவர்கள் கோரிக்கை.

* 574 வினா—**திரு. வி. கே. கோதண்டராமன்**, **திரு. டி. மார்டின்** : மாண்புமிகு கல்வி, சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1969-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 1-ம் தேதி அரசு கலைக் கல்லூரி மாணவர்கள் ஊர்வலமாக கோட்டைக்கு வந்து, அவர்களுடைய கோரிக்கைகளைக் கொண்ட மனுவை கனம் முதலமைச்சரிடம் கொடுத்துள்ளார்களா ?

(இ) ஆம் எனில், அதன்பேரில் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : (அ) இல்லை.

(இ) இந்த வினாவிற்கு இடமில்லை.

திரு. வி. கே. கோதண்டராமன் : கலைக்கல்லூரி மாணவர்கள், பக்கத்தில் இருக்கக்கூடிய எத்திராஜ் பெண்கள் கல்லூரி மாணவிகள் ஆகியோர்களிடையே ஏற்பட்ட தகராறின் விளைவாக நியூ காலேஜ் மாணவர்கள் . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கோட்டைக்கு ஊர்வலமாக வரவில்லை, மனுக் கொடுக்கவில்லை என்று சொல்லிவிட்டார்கள். அது சம்பந்தமாக கேள்வி கேளுங்கள். நடந்த வேறு நிகழ்ச்சியைப் பற்றி கேள்வி கேட்கவேண்டாம்.